நகர்மன்றம்,
போடிநாயக்கனூர், நாள்.19.03.2020

2020ம் ஆண்டு மார்ச் மாதம் 19.03.2020ம் தேதி வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை :- திரு.வீ.குணசேகர்.B.E,
ஆணையாளர் (கூ.பொ) மற்றும் தனிஅலுவலர்

**1)** நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,மதுரைஅவர்களின் அலுவலகத்திற்கு சொந்தமான ஈப்பு எண் TN.58CG6666 வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்வதற்கு ஆகும் உத்தேசசெலவினம்ரூ.1,55,540/—ஐ இந்நகராட்சி நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
மதுரை அவர்களின்செயல்முறை ஆணைஎண்:959/2020/அ1. நாள்.10.03.2020-ன் படி போடிநாயக்கனூர் நகராட்சி மூலம் மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை போடிநாயக்கனூர் நகராட்சி பொதுநிதியில் இருந்து ஈடு செய்யவும்,உத்திரவிட்டதன் பேரில்மேற்படி வாகனத்தின் முக்கியத்துவம் கருதி 16.03.2020 ம் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | Win Motors,<br>Madurai | : | ரூ.1,60,810 |
| 2. | C.G.cars,<br>Madurai | : | ரூ.1,57,550 |
| 3. | Globel Cars,<br>Madurai | : | ரூ.1,55,540 |

**அலுவலகக்குறிப்பு :** வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி கோரியுள்ள Globel Cars, மதுரை விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.883/2020/இ1)**
**தீர்மான எண் : 79** அனுமதிக்கப்பட்டது.

2)போடிநாயக்கனூர் நகராட்சி 1916ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு, 100 ஆண்டுகள் கடந்த நகராட்சி ஆகும். மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைந்துள்ள இந்நகராட்சி, 7.23 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும், 75665 மக்கள் தொகையையும் கொண்டு, ஏலக்காய் வணிகத்திற்கு பெயர் பெற்றது. இந்த நகராட்சியின் பாரம்பரியத்தை கருத்தில் கொண்டு, இங்கே வாழ்கின்ற மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 110—ன் கீழ் 19.03.2020 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சிறப்பு நிதியாக ரூ.50.00/— கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சிக்கு நூறாண்டு நினைவாக கீழ்காணும் உள்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி கோரி உரிய கருத்துருவினை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>சுருக்கம்</u>

| வ.எண். | பணியின் விபரம் | மதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | பேருந்து நிலையத்தில் ஓடுதளம் அமைத்தல் கடைகள் கட்டுதல் அலங்கார வளைவு அமைத்தல் மற்றும் அபிவிருத்தி பணிகள் செய்தல் | 3.00 |
| 2 | வார்டு எண்.20 தென்றல் நகரில் வாரச்சந்தை அமைத்தல் | 2.00 |
| 3 | வார்டு எண்.22 புதுத்தெருவில் தினசரி மார்க்கெட் அமைத்தல் | 2.00 |
| 4 | மயானத்தில் தியான மண்டபம், சுற்றுச்சுவர், உள் சாலை அமைதல், மின் வசதி மற்றும் தண்ணீர்வசதி செய்தல் | 1.00 |
| 5 | சிறைக்காடு உரக்கிடங்கில் உள்ள திடக்கழிவுகளை பயோ மைனிங் முறையில் அகற்றுதல் | 2.50 |
| 6 | நகர்பகுதியில் உள்ள பூங்காக்களை மேம்படுத்துதல் | 2.50 |
| 7 | பொது சுகாதார பிரிவிற்கு ஐந்து பிரிவு அலுவலகம் கட்டுதல் | 1.00 |
| 8 | வார்டு எண்.32 சுப்புராஜ் நகரில் நகராட்சி பணியாளர் குடியிருப்பு கட்டுதல் | 5.00 |
| 9 | நகர் பகுதியில் உள்ள பழுதடைந்த ஏழு பழைய கழிப்பிடங்களை அகற்றிவிட்டு புதிய கழிப்பிடம் கட்டுதல் | 1.00 |
| 10 | நகரில் விரிவுபடுத்தப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை குழாய் பதித்தல் | 2.00 |
| 11 | குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகள் முடிவுற்ற பகுதிகளில் சாலைகள் சீரமைக்கும் பணி மேற்கொள்ளுதல் | 25.00 |
| 12 | தேனி– மூணாறு சாலை மற்றும் காமராஜ் பஜார் தெருவில் மழைநீர்வடிகால் கட்டுதல் | 3.00 |
| | மொத்தம் | 50.00 |

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்.885/2020/இ1)**
**தீர்மான எண் : 80** அனுமதிக்கப்பட்டது.

3) போடிநாயக்கனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் உள்ள TATA ACE மூன்று வாகனங்களின் டயர்கள் பழுதடைந்துள்ளது. எனவே 1 வாகனத்திற்கு 4 டயர்கள் வீதம் மூன்று வாகனங்களுக்கு 12 டயர்கள் வாங்கவும் அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.40,000/–ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வாகன எண் | டயர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | TN60AW6015 | 4 Nos |
| 2 | TN60AW6019 | 4 Nos |
| 3 | TN60S2049 | 4 Nos |
| | மொத்தம் | **12 Nos** |

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்.1019/2020/H2)**
**தீர்மான எண் : 81** அனுமதிக்கப்பட்டது.

4) போடிநாயக்கனூர் நகராட்சியில் கொரானா வைரஸ் தடுப்பு நடவடிக்கள் மேற்கொள்ள 09.03.2020ம் தேதிய விலைப்புள்ளி அறிவிப்பினை ஏற்று கீழ்கண்ட விவரப்படியாக விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதனை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்பட்டுள்ளது.

அ) துண்டுப்பிரசுரம்

| வ. எண் | விவரம் | எண்ணம் | தொகை. ரூ. |
|---|---|---|---|
| 1 | ஈஸ்வரி பிரிண்டர்ஸ், போடி | 5000 | 5,000/- |
| 2 | சித்ரா கம்ப்யூட்டர் ஆப்செட் பிரிண்டர்ஸ், போடி | 5000 | 5,200/- |
| 3 | ஸ்ரீ ஆனந்தம் ஆப்செட் பிரஸ், போடி | 5000 | 5,350/- |

ஆ) பிளக்ஸ் பேனர்

| வ. எண் | விவரம் | எண்ணம் | தொகை. ரூ. |
|---|---|---|---|
| 1 | அய்யப்பா பிளக்ஸ், போடி | 1 சதுர அடிக்கு | 10/- |
| 2 | பிரிண்டெக் டிஜிட்டல் பிளக்ஸ் பிரிண்டர்ஸ் நிறுவனம், போடி | 1 சதுர அடிக்கு | 12/- |
| 3 | விநாயகா டிஜிட்டல் பிரிண்டிங் , போடி | 1 சதுர அடிக்கு | 13/- |

இ) ஸ்பரேயர்ஸ்

| வ. எண் | விவரம் | அளவு | எண்ணம் | தொகை. ரூ. |
|---|---|---|---|---|
| 1 | விஜயா அக்ரோ ஏஜென்ஸிஸ், தேனி | ஸ்பரேயர்ஸ் 16 லிட்டர்<br>ஸ்பரேயர்ஸ் 2 லிட்டர் | 10<br>5 | 15,500/-<br>1,250/- |
| 2 | விக்னேஷ் அக்ரோ ப்ரோடாக்ட்ஸ், தேனி | ஸ்பரேயர்ஸ் 16 லிட்டர்<br>ஸ்பரேயர்ஸ் 2 லிட்டர் | 10<br>5 | 16,500/-<br>1,500/- |
| 3 | கௌமாரியம்மன் அக்ரோ லேப், தேனி | ஸ்பரேயர்ஸ் 16 லிட்டர்<br>ஸ்பரேயர்ஸ் 2 லிட்டர் | 10<br>5 | 17,000/-<br>1,750/- |

**அலுவலகக் குறிப்பு:** மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய கீழ்கண்ட விவரப்படியான நிறுவனங்களுக்கு விநியோக உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

| வ. எண் | விநியோக செய்யப்பட வேண்டிய பொருட்கள் | விநியோக உத்தரவு வழங்கப்பட வேண்டிய நிறுவனம் |
|---|---|---|
| 1 | துண்டுப்பிரசுரங்கள் | ஈஸ்வரி பிரிண்டர்ஸ், போடி |
| 2 | பிளக்ஸ் பேனர்கள் | அய்யப்பா பிளக்ஸ், போடி |
| 3 | ஸ்பரேயர்ஸ்கள் | விஜயா அக்ரோ ஏஜென்ஸிஸ், தேனி |

**தீர்மான எண் : 82** அனுமதிக்கப்பட்டது.

**5)**போடிநாயக்கனூர் நகராட்சியில் புதிய திட்டப்பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்ய கட்டிட வடிவமைப்பு செய்ய வேண்டி உள்ளதால் **09.03.2020** அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| **S.No** | **Description of Work** | **M/s. SK ENGINEERING & CONSTRUCTION Bodinayakanur** | M/s. FULCRUM ENGINEERING CONSULTANCY Trichy | M/s. VEL CONSTRUCTION Bodinayakanur |
|---|---|---|---|---|
| | | **Rate per Sq.ft** | Rate per Sq.ft | Rate per Sq.ft |
| 1 | Preparation of structural design for Construction of GYM for Men at Ward no.32 Subburaj nagar play ground in Bodinayakanur Municipality | 5.00 | 6.00 | 5.50 |
| 2 | Preparation of structural design for Construction of shuttle cork indoor stadium in Sydney playground at Ward no.32 Subburaj nagar, Bodinayakanur Municipality | 3.00 | 3.50 | 3.75 |
| 3 | Preparation of structural design forConstrution of mcc with a capacity of 5tpd with compound wall at Bodinayakanur Municipality | 2.50 | 3.50 | 3.25 |

**அலுவலகக்குறிப்பு :** வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக விலைப்புள்ளி வழங்கியுள்ள M/S S.K. Engineering & Construction என்பவரின் விலைப்புள்ளியை ஏற்றுக்கொண்டு வேலை உத்தரவு வழங்கவும் இப்பணிக்கான ஆகும் செலவினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்:956/2020/இ1)**
**தீர்மான எண் : 83** குறைந்த விலைப்புள்ளி அனுமதிக்கப்பட்டது.

தனிஅலுவலர் (ம) ஆணையாளர்
போடிநாயக்கனூர் நகராட்சி